INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

ஊடக வெளியீடு

# நிறுத்தப்படாது தொடருகின்றது: அரச சித்திரவதையும் பாலியல் வன்முறையும்.

14 ஜூலை 2017

**ஜோகன்னஸ்பர்க்:** இலங்கை பாதுகாப்பு படையினர் தமிழர்களை கடத்துவது ம் சித்திரவதை செய்வதும் தொடர்ந்து அமைப்பு ரீதியாக நிலைத்துள்ளது. ஏனேனில் புதியஅரசொன்று பதவிக்கு வந்து 30 மாதங்களா கியும் அங்கு 'ஆழமாக நிலைத்திருந்த ' வலையமைப்புகளை கலைக்க தவறிவிட்டது. அவற்றுள் அந்நாட்டின் மிகப்பெரிய ராணுவ முகாம் களில் உள்ள சித்திரவதை கூடங்கள் , குடிவரவு மோசடிகள் , மனிதக்கடத்தல்கள் , அரசு சார்ந்த அமைப்புகள் அச்சுறுத்தி பணம் பறித்தல் முதலியன அடங்குகின்றன .

"*இலங்கையில் வெள்ளை வானில் ஆட்களை க் கடத்துவது தொடர்கின்றன என்பது ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல . ஏனெனில் கடந்தகாலங்களில் இவ்வகையிலன குற்றவியல் செயற் பாடுகள் அரசினால் ஊக்குவிக்கப்பட்டு ம் அவ்வகையான செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு வெகுமதி வழங்கப்படும் உள்ளது. ஆதலால் இவ்வகையான செயற் பாடுகளில் ஈடுபடுபவர்கள் அச்செயல்களுக்கு ஒருபோதும் பொறுப்புக்கூற செய்யமாட்டார்கள் என்ற உத்தரவாதம் இருப்பதால்* " ITJP யின் நிறைவேற்று பணிப்பாளர் யாஸ்மின் சூகா இதுதொடர்பில் இவ்வாறு

கூறுகின்றார். மேலும் "*தமிழர்களை சித்திரவதை செய்வது பெருமளவு இலாபகரமான செயற்பாடாக உள்ளது.*" என அவர் மேலும் கூறுகிறார்.

சர்வதேச தீர்ப்பாயங்களிலும் ஐநா ஆணைக்குழுக்களிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் (ICC) பணிபுரிந்த வழக்கு தொடருனர்களையும் சட்டத்தரணிகளையும் ITJP கொண்டுள்ளது. கடும் பிரயத்தனம் எடுத்து சித்திரவதைக்கு உள்ளாகி உயிர் தப்பியவர்களின் வடுக்களை சட்டவைத்திய பரிசோதனைகளின் மூலம் வைத்திய துறை சார்ந்த அரச சார்பற்ற ஸ்தாபனங்களும் அதன் வைத்தியர்களும் ITJP ஆய்வு செய்து எடுக்கும் தீர்மானங்களுக்கு வலுச்சேர்க்கின்றனர்.

சிறிசேனவின் ஆட்சி காலத்தில் சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பாதிப்புற்ற 57 தமிழர்களின் விபரமான சாட்சியங்களை ITJP யின் அண்மைய அறிக்கை கொண்டுள்ளது. அவர்களுள் 24 பேர் 2016/17 களில் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டவர்களாவர். அச்சித்தி ரவதைகள் தொடர்பில் எந்த ஒரு அலுவலரும் புலனாய்வுக்குள்ளாக்கப்படவோ அல்லது அவ்வாறு செய்தமைக்காகவோ பொறுப்புக்கூற வோ செய்ய படவில்லை.

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் சித்திரவதை என்பது இலங்கை பாதுகாப்பு படை யில் உள்ள விஷமிகளின் (rotten apples ) செயல்கள் என கூறி தட்டி கழித்துவிட முடியாது . ஏனெனில் குறித்த சம்பவங்களில் சித்திரவதை செய்வதில் ஈடுபட்டவர்களில் சிரேஷ்ட அலுவர்களும் உள்ளனர். ஆதலால் இச் செயல்கள் அமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாகின்றன என்பதை "நிறுத்தப்படாது தொடர்கின்றது " என்ற ITJP யின் அறிக்கை காட்டுகின்றது.

- 2016/17 களில் நடைபெற்ற சம்பவங்களில் மூன்றில் ஒன்று சித்திரவதை நடத்தும் கூடத்தினுள் சிரேஷ்ட அதிகாரிகள் பிரவேசித்ததாக விபரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சித்திரவதை நடைபெறுவதை அங்கு கட்டளையிடும் பொறுப்பானவர்கள் அறிந்திருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.
- 2016/17 களில் பாதிப்புற்ற 12 பேருக்கு தனித்திருக்கும் வேறு கூடங்களில் இருந்து அங்கு தடுத்து வைய்த்திருப்பவர்கள் அலறுவது கேட்டதாகக் கூறுகின்றனர் இதிலிருந்து தெரியவருவது யாதெனில் (அ) பலர் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர் என்றும் . (ஆ) அவ்விடத்தில் சமூகமாக இருந்த ஏனைய பாதுகாப்பு படையைய் சேர்ந்த ஆளணிகளுக்கு அங்கு சித்திரவதை நடை பெறுகின்றது என்பதை தெரிந்திருந்தனர் .
- சித்திரவதை கூடங்களில் வைத்து உயிரியல் அளவை முறையில் கையடையாளங்கள் எடுக்கும் கருவிகள் பாவிக்கப்பட்டுள்ளன. இவ்வகையான தொழில்நுட்பம் அண்மையில் தான் கட்வுச் சீட்டுகள் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் இதனைப் பாவிக்கும் வாய்ப்பில்லை.

அவ்வகையானோர் முதலில் கையடையாளம் எடுக்க வேண்டிய தேவையும் இல்லை .

- பாதிப்புற்றோரை கேள்வி கேட்டு விசாரிக்கும் போது முன்னர் பரந்தளவில் தெரியாதிருந்த விசாரணைகளின் பொழுது கொடுக்கப்பட்ட தகவல்கள் பற்றிய கேள்விகளை கேட்டுள்ளார்கள். இதிலிருந்து தெரிய வருவது யாதெனில் சித்திரவதை செய்பவர்கள் கடந்த காலத்தில் நடந்த விசாரணைகள் தொடர்பான தகவல்களைக் கொண்ட மத்திய நிலையத்தில் (data base) உள்ள விபரங்களை அவர்கள் எட் டக்கூடியதாக உள்ளது என்பது .
- பாதிப்புற்ற எண்மர் தங்களைத் துன்புறுத்தியவர்கள் இராணுவ சீருடையில் இருந்ததாக விபரித்துள்ளார்கள்.
- பாதிப்புற்றோர் 7 பேர் அவர்களுக்கு தெரிந்த இடத்திலேயே சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள். அதாவது பொதுவாக யோசேப் முகாம் என்று அழைக்கப்படும் பாதுகாப்புப் படையினரின் வன்னித் தலைமையகம் ஆகும்.

- பாதிப்புற்றோர் அதெற்கென அமைக்கப்பட்ட கூடங்களிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அத்துடன் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டது அவ்வாறு செய்வதற்கென உபகரணங்களுடன் நிர்மாணிக்கப்பட்ட அறைகளிலேயே .
- ஆட்களைக் கடத்துவதும், விடுவிப்பதும், தடுத்து வைப்பதும் ராஜபக்ச ஆட்சியில் இருந்த காலத்தில் இருந்த வழிமுறைக்கமையவே.
- பாதிப்பு ற்றவர் தப்பிச்சென்றபின் அவரின் குடும்பத்தின் மீது பழிவாங்கல்கள் தொடர்கின்றன .

ITJP யின் அறிக்கையில் 2016/17 களில் சித்திரவதை செய்வதற்கென பின்பற்றப்பட்ட வழிமுறைகள் தத்துரூபமாக விபரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கிரிக்கட் பொல்லுகளாலும் குழாய்களாலும் அடித்தல், சிகரெட்டினால் எரித்தல், நெருப்பில் காய்ச்சிய உலோகக்கம்பியினால் சுடுதல், மூச்சுத்திணறச் செய்தல், தலை கீழாகத் தொங்க விடுதல் முதலியன உள்ளடங்கல் ஆகும் . இதற்கு மேலதிகமாக பாதிப்புற்ற 18 பேர் (15 ஆண்கள் ) தாம் அனுபவித்த பாலியல் வன்முறைகளை விபரித்துள்ளனர் .

*"இவ்வகையான குற்றம்புரிபவர்களினது பாலியல் ஒழுக்கக்கேட்டினதும் கொடூரத்தினதும் அளவை எடுத்துக் கூறுவது கடினம் "* எனவும் *"இலங்கையில் பாதுகாப்பு பிரிவினது எந்த ஒரு மறுசீரமைப்பும் நடத்தப்படுமேயாயின் இவ் வகையிலான கொடூர குற்றச்செயல்களுக்கு காரணமான அலுவலர்களை குற்றவியல் ரீதியில் பொறுப்புக்கு கூற வைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பது தெளிவு "* என்றும் திருமதி சூகா கூறுகின்றார் .

முற்றிற்று .

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT